பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

08 12 2024 **SUNDAY** **6.30 PM**

மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. வடகிழக்கு மாநிலங்கள் இதுவரை இல்லாத அளவிற்கு வளர்ச்சியை கண்டுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. நாடு முழுவதும் மருத்துவ படிப்புகளுக்கான இடங்களின் எண்ணிக்கை கடந்த பத்தாண்டுகளில் 130 சதவீதம் அதிகரித்துள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

3. இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் எட்டு பேர் சிறைபிடிக்கப்பட்டுள்ளனர்.

4. வங்கக்கடலில் உருவாகியுள்ள குறைந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி வலுவடைய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.

5. தை-பே ஓபன் வில்வித்தை போட்டியில் இந்தியா ஒரு தங்கம், இரண்டு வெண்கலப்பதக்கங்களை வென்றது

---- இனி விரிவான செய்திகள் ----

<<<<<<<>>>>>>

வடகிழக்கு மாநிலங்கள் இதுவரை இல்லாத அளவிற்கு வளர்ச்சியை கண்டுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், இதுதொடர்பாக, மத்திய அமைச்சர் திரு ஜோதிர் ஆதித்ய சிந்தியா எழுதியுள்ள கட்டுரையையும் பகிர்ந்துள்ளார்.

வடகிழக்கு மாநிலங்களின் கலாச்சாரத்தை பிரதிபலிக்கும் வகையில் புதுதில்லியில் இன்று நிறைவடையும் அஷ்டலஷ்மி திருவிழா பற்றியும் பிரதமர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த திருவிழா, வடகிழக்கு மாநிலங்களின் கைவினைக்கலைஞர்களுக்கு உரிய வர்த்தக வாய்ப்பினை ஏற்படுத்தியுள்ளதாக திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

<<<<<<<>>>>>>

மத்தியில் பிஜேபி தலைமையிலான அரசு பொறுப்பேற்றபின்னர், மருத்துவப்படிப்புகளுக்கான இடங்களின் எண்ணிக்கை 130 சதவீதம் அதிகரித்துள்ளதாக சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

2013-ஆம் ஆண்டு 387-ஆக இருந்த மருத்துவக்கல்லூரிகளின் எண்ணிக்கை தற்போது 780-ஆக அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த காலக்கட்டத்தில் மருத்துவப்படிப்புகளுக்கான இடங்களின் எண்ணிக்கை 51 ஆயிரத்து 348-ல் இருந்து, ஒரு லட்சத்து 18 ஆயிரத்து 137-ஆக அதிகரித்துள்ளதாகவும் சுகாதாரத்துறையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

<<<<<<<>>>>>>

இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் எட்டு பேர் சிறைபிடிக்கப்பட்டுள்ளனர்.

ராமேஸ்வரத்தை சேர்ந்த இந்த மீனவர்களை சர்வதேச கடல் எல்லையை தாண்டியதாக கூறி, இலங்கை கடற்படையினர் கைது செய்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(சவுண்ட் பைட் - கார்த்திகேயன் - 32 செகண்ட்ஸ்)*

<<<<<<<>>>>>>

சென்னையில் மனநலம் பாதிக்கப்பட்ட கல்லூரி மாணவிக்கு எதிரான பாலியல் வன்முறை சம்பவம் குறித்து முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் விளக்கம் அளிக்க வேண்டும் என்று பிஜேபி மாநிலத்தலைவர் திரு அண்ணாமலை வலியுறுத்தியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கோரிக்கையை விடுத்துள்ள அவர், ஏழு பேர் கொண்ட கும்பலால் பல மாதங்களாக அந்த மாணவி பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது அதிர்ச்சி அளிப்பதாக உள்ளது என்று கூறியுள்ளார்.

இதுதொடர்பாக, மாணவியின் தந்தை காவல்நிலையத்தில் புகார் அளித்தபோதும் குற்றவாளிகளை வெறும் எச்சரிக்கையுடன் காவல்துறையினர் விடுதலை செய்திருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

பின்னர், மாணவியின் உறவினர் மேற்கொண்ட முயற்சியின் காரணமாக வழக்கு பதிவு செய்து இரண்டு பேர் கைது செய்யப்பட்டிருப்பதாகவும், ஐந்து பேர் தலைமறைவாகிவிட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பிற மாநிலங்களில் நடைபெறும் குற்றச்சம்பவங்கள் தொடர்பாக கண்டனம் தெரிவிக்கும் முதலமைச்சர், இதுகுறித்து மௌனம் சாதிப்பது ஏன் என்றும் திரு அண்ணாமலை வினவியுள்ளார்.

<<<<<<<>>>>>>

தமிழகத்தில் மின்வாரியத்தை படிப்படியாக தனியார் மயமாக்க மேற்கொள்ளப்படும் முயற்சி கண்டித்தக்கது என்று பாமக நிறுவனர் மருத்துவர் ச ராமதாசு கூறியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், இக்கோரிக்கையை விடுத்துள்ளார்.

இதுவரை இல்லாத அளவிற்கு 4 ஆயிரத்து 500 கோடி ரூபாய் மதிப்பிலான துணை மின் நிலையம் மற்றும் அதனுடன் இணைந்த மின்வழித்தட திட்டத்தை தனியார் முதலீட்டில் செயல்படுத்த மின்சார வாரியம் தீர்மானித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பாக, ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த திட்டம் செயல்படுத்தப்பட்டால் அது, மின்வாரியத்தை தனியார் மயமாக்கும் நடவடிக்கைகளை விரைவுபடுத்தும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இதனை கருத்தில்கொண்டு, துணை மின் நிலையம் அமைக்கும் திட்டத்தை தனியாரிடம் ஒப்படைக்கும் முடிவினை தமிழக அரசு கைவிட வேண்டும் என்றும் திரு ராமதாசு கோரியுள்ளார்.

<<<<<<<>>>>>>>

வங்கக்கடலில் உருவாகியுள்ள குறைந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி வலுவடைய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் கூறியுள்ளார்

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

*(சவுண்ட் பைட் - செந்தாமரை கண்ணன் -(1) - 68 செகண்ட்ஸ்)*

கடல் பகுதிகளில் பலத்த காற்று வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் மீன்பிடிக்க செல்ல வேணடாம் என்றும் திரு செந்தாமரை கண்ணன் அறிவுறுத்தினார்.

*(சவுண்ட் பைட் - செந்தாமரை கண்ணன் -(2) - 38 செகண்ட்ஸ்)*

<<<<<<<>>>>>>>

அரசியல் சாசனம் அறிவோம் குறித்த சிறப்பு நேர்காணல் நிகழ்ச்சிக்கு சென்னை அகில இந்திய வானொலியின் மாநில செய்திப்பிரிவு ஏற்பாடு செய்துள்ளது.

வழக்கறிஞர் சேதுராமனுடன், ஊடகவியலாளர் சியாமளா பங்கேற்கும் இந்த நிகழ்ச்சியின் முதல் பகுதி ஒருங்கிணைந்த அலைவரிசையில் இன்றிரவு எட்டரை மணிக்கு ஒலிபரப்பாகிறது.

<<<<<<<>>>>>>>

*மாவட்டச் செய்திகள்*

விருதுநகர் மாவட்டம் சாத்தூர் அருகே வைப்பாறு ஆற்றில் 18 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டுவரும் மேம்பாலப்பணிகளை மாநில அமைச்சர் திரு கே கே எஸ் எஸ் ஆர் ராமச்சந்திரன் இன்று ஆய்வு செய்தார்.

------------------

மயிலாடுதுறை மாவட்டத்தில் தூய்மைப்பணியாளர்களுக்கான சிறப்பு மருத்துவ முகாமினை ஆட்சியர் திரு மகாபாரதி இன்று ஆய்வு செய்தார்.

------------------

வேலூர் பாலாற்றில் குளிக்க சென்ற எட்டு வயது சிறுவன் நீரில் மூழ்கி உயிரிழந்தான்.

------------

ஈரோடு மாவட்டம் பவானியில் ஆயிரத்து 300 ஆண்டுகள் பழமை வாய்ந்த செல்லியாண்டி அம்மன் கோவில் கும்பாபிஷேக விழா இன்று நடைபெற்றது. ஆயிரக்கணக்கானோர் இதில் பங்கேற்றனர்.

-----------------

சென்னை வண்ணாரப்பேட்டை பகுதியில் போதைப்பொருட்கள் வைத்திருந்த மூன்று பேரை காவல்துறையினர் கைது செய்தனர்.

**<<<<<<<>>>>>>**

*விளையாட்டுச் செய்திகள்*

தை-பே ஓபன் வில்வித்தை போட்டியில் இந்தியா ஒரு தங்கம், இரண்டு வெண்கலப்பதக்கங்களை வென்றது.

மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் **Jyothi Surekha Vennam** 144-140 என்ற புள்ளிக்கணக்கில் சீன தை-பேயின் **Chen Yu Ju**-வை வென்று தங்கப்பதக்கத்தை கைப்பற்றினார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவில் **Prathamesh Fuge**-ம், மகளிர் ஒற்றையர் பிரிவில் **Ankita Bhakat**-ம் வெண்கலப்பதக்கம் வென்றனர்.

-------------

குவஹாத்தி மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் சதீஷ்குமார் கருணாகரன் பட்டம் வென்றார்.

இன்று நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் அவர், 21-17, 21-14 என்ற செட் கணக்கில், சீனாவின் **Zhu Xuan Chen**-ஐ வென்றார்.

மகளிர் இரட்டையர் பிரிவில் **Tanisha Crasto – Ashwini Ponnappa** இணையும் பட்டம் வென்றது.

இன்று நடைபெற்ற இறுதியாட்டத்தில் இந்த இணை, 21-18, 21-12 என்ற செட் கணக்கில் சீனாவின் **Li Hua Zhou – Wang Zi Meng** இணையை வென்றது.

--------------

உலக செஸ் சாம்பியன் போட்டியின் 11-ஆவது சுற்றில் இந்தியாவின் குகேஷ் - சீனாவின் **Ding Liren**-ஐ வென்றார்.

சிங்கப்பூரில் நடைபெற்றுவரும் இப்போட்டியில் தற்போது ஆறு புள்ளிகளுடன் குகேஷ் முன்னிலை பெற்றுள்ளார்.

-----------

ஆசிய கோப்பை மகளிர் ஜூனியர் ஹாக்கிப்போட்டியில் இந்தியா இன்று பங்களாதேஷை எதிர்கொள்கிறது.

மஸ்கட்டில் நடைபெறவுள்ள இப்போட்டி இரவு மணி 8.30-க்கு தொடங்குகிறது.

-------------

புதுதில்லியில் நடைபெற்று வரும் ஆசிய மகளிர் **Handball** சாம்பியன் போட்டியில் ஐந்து முதல் எட்டாவது இடத்திற்கான ஆட்டத்தில் இந்தியா – சிங்கப்பூரை வென்றது.

**<<<<<<<END>>>>>>>**